**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.120/2019**

பெயர்-திரு.ஜெகதீசன் (எ) ஜெகதீஸ்வரன் நாள்.11.06.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும். வழக்கில் தாவா சொத்தை எனது தாயார் பாப்பம்மாள் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் பாப்பம்மாள் தாவா சொத்தை 1981 ல் கிரயம் வாங்கியுள்ளார். 1981 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் எனது வீட்டில் உள்ளது. 1981 ம் ஆண்டு எனது தாயார் பெயரிலுள்ள ஆவணத்தை தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தாயார் பெயரில் 16.02.1981 ல் எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தாயார் குள்ளகோனார் மகன் பழனிசாமியிடம் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். பழனிசாமி வள்ளியம்மாள் என்பவர் கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 02.07.2019 ல் எழுதப்பட்ட ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தாயார் பெயரிலுள்ள மூல பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யததற்கான காரணம் என்னுடைய பத்திரமே போது என்பதால் தான்.

3. 1 ம் பிரதிவாதியின் வீடு எனது வீட்டிற்கு கிழபுறம் உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி என்பதும், ராமசாமியின் தந்தை பெயர் சுப்பணகவுண்டர் என்றால் சரிதான். எனது செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 ல் உள்ள செக்குபந்தி தான் பி.வா.சா.ஆ.1, 2 ல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் சுப்பணகவுண்டர் வீட்டு காம்பவுண்ட் சுவற்றிற்கும், சுண்ணாம்பு பூசுவதற்கு 3½ அடி அகலத்தில் விட்டிற்கும் சந்திற்கும் மேற்கும் என்றால் சந்து எனக்கு பாத்தியப்பட்டதா? என்றால் இல்லை.

4. எனது வழக்கறிஞரிடம் எனது மூல பத்திரங்களை கொடுத்தேனா? என்றால் கொடுத்தேன். நான் எனது வீட்டிற்கு கிழக்கே காம்பவுண்ட் சுவர் கட்ட முயற்ச்சித்தது எனது சொத்தின் அத்திலா அல்லது 3½ சந்திலா என்றால் எனது சொத்தின் அத்தில் தான் கட்ட முயற்சித்தேன். எனது சொத்தின் அத்து 3½ அடி சந்தின் மேற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான்.

5. எனது பட்டாவின் படி அளப்பதற்கு வருவாய் அலுவலர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த அறிக்கையின் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா? என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி 2½ அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வருவாய் துறையினர் உத்தரவை தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. எனது வழக்கின் சொத்தின் கிழக்கு பகுதி பொது சந்து உள்ளது என குறிப்பிட்டுள்ளேனா? என்றால் இல்லை. 3½ அடி சந்து பொது சந்து என வருவாய் துறையில் உத்தரவு உள்ளதா? என்றால் இல்லை.

6. நான் இந்த வழக்கை எனது பெயரில் உள்ள பட்டாவின் அளவின் படி தான் தாக்கல் செய்துள்ளேன். பட்டாப்படி எனக்கு 4.13 செண்ட் சொத்து சொந்தமானதாகும். வருவாய் துறையினர் வந்து அளந்து போது எனது மூல பத்திரமான 1981, 1980 பத்திரங்களை அவர்களிடம் கொடுத்தேன். எனது பட்டா வா.சா.ஆ.2, 9 ல் பரப்பாக 0.01.67 ஹெக்டேர் என்ற அளவு உள்ளது என்றால் சரிதான். பட்டாப்படி 4 செண்ட் தான் வருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணமான புல வரைபடத்தில் உள்ள அளவுகளின் படி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.6 ஆவணம் கொடுத்த அளவையர் எழுத்து மூலமான அறிக்கை கொடுத்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ல் தாசில்தார் முத்திரையோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 புல வரைபடம் தயார் செய்த அளவையரை விசாரிக்க தயாராக உள்ளேனா? என்றால் உள்ளேன். அளவையரிடம் 1ம் பிரதிவாதியின் பத்திரத்தை நான் வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. இடை மனு எண்.2/2019 ன்படி ஒரு தலைபட்சமாக இடைக்கால உறுத்துக்கட்டளை கொடுக்கப்பட்டதா என்றால் பட்டாப்படி கொடுக்கப்பட்டது. அந்த உத்தரவு 11.07.2019 ல் நீக்கறவு(Vacated) செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. 11.07.2019 உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு மனு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. அதன் மேல்முறையீட்டு எண் தெரியுமா என்றால் தெரியாது. இதே வழக்கில் வியாஜ்ஜிய மூலம் குறித்து திருத்தம் செய்ய மனு செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மாண்பமை உயர்நீதிமன்றத்தில் CRP(PD).No.1436/2021 and C.M.P.No.11274/2021 என மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவும் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

9. இடை மனு எண்.8/2022 என ஆணையர் நியமிக்க கோரி மனு செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பிறகு எனது சொத்தின் மேற்கு மற்றும் வடக்கு பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர்களை சேர்க்க மனு செய்தேன் என்றால் சரிதான். தற்போது 3½ சந்து பொது சந்து என விளம்புகை கேட்டு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பொது சந்தில் 1 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை திருப்பி தரக் கேட்டு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. எனது வீட்டின் மேற்கு, வடக்கில் குடியிருப்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று கட்சி செய்கிறேனா என்றால் ஆமாம். மேற்கு பக்கத்தில் சந்து உள்ளதா என்றால் இல்லை, வடக்கு பக்கத்தில் சுண்ணாம்பு பூசுவதற்காக சந்து விடப்பட்டுள்ளது. பத்திரப்படி பாத்தியம் கேட்கிறேனா என்றால் பட்டாப்படி தான் பாத்தியம் கேட்கிறேன். பட்டாப்படி 1 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் அதை எதிர்த்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் ஆட்சியரிடம் மனு செய்தேனா என்றால் இல்லை. பட்டா என்பது உரிமை மூலத்தை தீர்மானிக்கும் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

11. எனது பத்திரங்களின் படியே 3½ அடி சந்து எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரிதான். 3 ½ அடி சந்தில் 1 ம் பிரதிவாதி 2½ அடி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார், மீதம் 1 அடி தான் உள்ளது. இந்த சங்கதியை தற்போது தான் புதிதாக கூறுகிறேன் என்றால் சரிதான். 3½ அடி சந்தில் எனது வீட்டின் கிழக்கு பக்கத்தில் பூசுவதற்கு எனது செட்டில் மெண்ட் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எனது பத்திரத்தை படித்து பார்க்காமல் பட்டாவின் படி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த வித பரிகாரமும் கிடைக்காது என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது</u>**

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.06.11 15:49:47 +0530